பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
09 05 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஏழ்மை, வேலைவாய்ப்பின்மை மற்றும் பட்டினிப் பிரச்சினைக்கு தேசிய ஜனநாயக கூட்டணி அரசால் மட்டுமே தீர்வுகாண முடியும் என்று பிஜேபி கூறியுள்ளது.

2. தேர்தல் முடிவு தாங்கள் எதிர்பார்த்தபடி இருக்காது என்பதைக் கருத்தில்கொண்டு பிஜேபி மக்களை தவறாக வழிநடத்தி வருவதாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

3. 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு உயர்கல்வி குறித்து வழிகாட்டும் 'கல்லூரிக் கனவு' நிகழ்ச்சி திருவள்ளூர், நீலகிரி உள்ளிட்ட 6 மாவட்டங்களில் இன்று நடைபெறுகிறது.

4. தமிழகத்தில் கோவை, திண்டுக்கல், கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள்---

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் மூன்று கட்ட வாக்குப்பதிவு நிறைவடைந்த நிலையில் எஞ்சியுள்ள தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏழ்மை, வேலைவாய்ப்பின்மை மற்றும் பட்டினிப் பிரச்சினைக்கு தேசிய ஜனநாயக கூட்டணி அரசால் மட்டுமே தீர்வுகாண முடியும் என்று பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

பீஹார் மாநிலம் பெஹுல்சராய் மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட **Matihaani** பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மத்திய அரசின் திட்டமான சோளம் மற்றும் கரும்பில் இருந்து தயாரிக்கப்படும் எத்தனால் உற்பத்தி நாட்டின் வேளாண்துறையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

இந்நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகும், வேலைவாய்ப்பின்மை பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்றும், பீஹார் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்றும் ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு. தேஜஸ்வி பிரசாத் யாதவ் குற்றம் சாட்டினார்.

அம்மாநிலத்தில் காராகட் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட **Akorhi Gola** பகுதியில் வாக்கு சேகரித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கிடையே தேர்தல் முடிவு தாங்கள் எதிர்பார்த்தபடி இருக்காது என்பதைக் கருத்தில்கொண்டு பிஜேபி மக்களை தவறாக வழிநடத்தி வருவதாக மேற்குவங்க மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. அதிர் ரஞ்சன் சவுத்ரி குற்றம் சாட்டியுள்ளார்.

மத்திய அரசு பல்வேறு நிலைகளில் சிறப்பாக செயல்பட தவறிவிட்டதாகவும், இது மக்களின் கவனத்திற்கு சென்றடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

இந்தியர்களின் நடப்பாண்டு ஹஜ் புனித யாத்திரைக்கான ஏற்பாடுகள் குறித்து வெளிநாடு வாழ் இந்தியர்கள் துறை செயலாளர் திரு. **Muktesh Pardeshi** ஜித்தா மற்றும் மதீனாவில் ஆய்வு செய்தார்.

சவுதி அரேபியாவுக்கு நான்கு பயணமாக சென்றுள்ள அவர், அந்நாட்டு ஹஜ் யாத்திரை துறையின் துணை அமைச்சர் டாக்டர் **Abdul Fattah Mashat**-ஐ சந்தித்து இந்திய ஹஜ் யாத்ரிகர்களுக்கான நலன், கட்டமைப்பு வசதிகள், போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்து விவாதித்தார்.

இந்த ஆண்டு இந்தியாவில் இருந்து ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர் ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்ள உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு நான் முதல்வன் திட்டத்தின்கீழ் உயர்கல்விக்கு வழிகாட்டும் 'கல்லூரிக் கனவு' நிகழ்ச்சி மாவட்டம் தோறும் நடைபெற்று வருகிறது.

திருவள்ளூர், நீலகிரி, பெரம்பலூர், மயிலாடுதுறை, திண்டுக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் இன்று இந்நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்கள் பங்கேற்க உள்ளதாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்விக் கடன் குறித்த விவரங்கள், கல்லூரி மற்றும் பாடப் பிரிவுகளை தேர்ந்தெடுத்தல் மற்றும் அதுசார்ந்த வேலைவாய்ப்பு குறித்த தகவல்கள், போட்டித் தேர்வுகள் குறித்து இந்நிகழ்ச்சியில் விளக்கப்படுகிறது.

<<<<>>>>

சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்கும் வகையில் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி எந்திரம் மூலம் துணிப்பை பெற்றுக்கொள்வதற்கான வசதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள 29 தனியார் பள்ளிகளுக்கு இயக்கப்படும் 161 வாகனங்களில் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் ஆய்வு செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் இன்று மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அவர், நீலகிரி, தென்காசி, திருநெல்வேலி வரையிலான மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவித்தார்.

கோவை, திண்டுக்கல், திருப்பூர் உள்ளிட்ட மேற்குத் தொடர்ச்சி மாவட்டங்களின் மலைப் பகுதிகளிலும், கரூர், நாமக்கல், சேலம் உள்ளிட்ட வட உள்மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக திரு. செந்தாமரைக்கண்ணன் குறிப்பிட்டார்.

இதற்கிடையே திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு சுற்றுவட்டாரப் பகுதியில் நேற்றிரவு கனமழை பெய்து குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மேலும் நிலக்கோட்டை, கொடைரோடு, அம்மையநாயக்கனூர், செம்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் நேற்று பரவலாக மழை பெய்தது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

தெற்கு காஸா பகுதியில் கடும் தாக்குதல் நடத்த இஸ்ரேல் திட்டமிட்டதை அடுத்து அந்நாட்டுக்கு வெடிகுண்டுகளை அனுப்புவதற்கான முடிவை அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளது.

------------

ரபீந்திரநாத் தாகூர் பிறந்த தினத்தையொட்டி கொழும்புவில் உள்ள சுவாமி விவேகானந்தா கலாச்சார மையத்தில் தாகூர் குறித்த சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

------------

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அமெரிக்க நிதியமைச்சர் திருமதி **Janet Yellen** உடன் சர்வதேச வரிமுறைகள் குறித்து தொலைபேசி வாயிலாக விவாதித்தார்.

------------

இந்திய வெளியுறவு செயலாளர் திரு. வினய் மோகன் குவாத்ரா இரண்டுநாள் பயணமாக பங்களாதேஷ் சென்றுள்ளார்.

------------

தருமபுரி மாவட்டத்தில் மாநில அரசின் அனைத்து வளர்ச்சித் திட்டங்களும் முழுமையாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. அதுல் ஆனந்த் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

------------

தென்காசி மக்களவைத் தொகுதியில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கொடிக்குறிச்சி யு.எஸ்.பி. கல்விக் குழுமத்தைச் சுற்றி ட்ரோன்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

------------

தூத்துக்குடி மாவட்டத்தில் உப்பளத்தில் பணிபுரியும் தொழிலாளர்களை காலை 10 மணி வரை மட்டுமே பணியில் ஈடுபடுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. குமார் ஜெயந்த் கூறியுள்ளார்.

------------

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை முதல் தாழக்குடி வரை நடைபெற்று வரும் சாலைப் பணியினை ஆட்சியர் திரு. ஸ்ரீதர் பார்வையிட்டார்.

------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொதுமக்கள் அளிக்கும் புகார்கள் மீது உடனடியாக விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று காவல்துறையினரை மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. சமய்சிங் மீனா அறிவுறுத்தியுள்ளார்.

------------

புதிய இந்திய குற்றவியல் சட்டங்கள் குறித்த இரண்டு நாள் கண்காட்சி புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

ஹைதராபாதில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட்செய்த லக்னோ அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 165 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக ஆயுஷ் பதோனி 55 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

166 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஹைதராபாத் அணி, 9 புள்ளி 4 ஓவரிலேயே விக்கெட் இழப்பின்றி 167 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அந்த அணியின் தொடக்க வீரர்கள் ட்ராவிஸ் ஹெட் 30 பந்துகளில் 89 ரன்னுடனும், அபிஷேக் ஷர்மா 28 பந்துகளில் 75 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் ஹைதராபாத் அணி புள்ளிப் பட்டியலில் 3ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

கொல்கத்தா, ராஜஸ்தான் அணிகள் முறையே முதல் 2 இடங்களில் உள்ளன. சென்னை அணி 4ஆம் இடத்தில் உள்ளது.

தரம்சாலாவில் இன்று நடைபெற உள்ள போட்டியில் பஞ்சாப் அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

---------------

இந்தியா – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையேயான 5வது மற்றும் இறுதி மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

சில்ஹெட்டில் நடைபெற உள்ள இப்போட்டி மாலை மணி 3.30க்கு தொடங்குகிறது.

5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்திய மகளிர் அணி முதல் 4 ஆட்டங்களில் வெற்றி பெற்றது.

-------------

செக் குடியரசில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - கலியந்தா பூனச்சா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 6-1, 6-3 என்ற செட் கணக்கில் பிரான்சின் **Bougue – Gronier** இணையை வென்றது.

---------------

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – ஜெர்மனியின் ஆண்ட்ரே பெக்மேன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<>>>>**